**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.145/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW 20 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **Dr.Muralidharan** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 15th day of December, 2025.

**(A 1 to A6 present)**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரசு அரியலூர் மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.08.2022 அன்று அதே துறையில் அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரியில் உதவி

பேராசிரியராக பணியிலிருந்தபோது கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவரிடமிருந்து குற்றஎண்.453/2022 –ல் சம்பந்தப்பட்ட சூர்யா (எ) சூர்யபிரகாஷ் வ/22 ஆண் நபர் என்பவருக்கு பாலியல் சம்பந்தமான மருத்துவ பரிசோதனை செய்ய விண்ணப்பம்பெறப்பட்டது. பொறுப்பு காவலராக தலைமை காவலர் திரு.முத்துகிருஷ்ணன் மற்றும் முதல் நிலை காவலர் திரு.வேலாயுதம் டி15 எஸ்ஆர்எம்சி போலீஸ் என்பவர்கள் நியமிக்கபட்டிருந்தார்கள். பரிசோதனை அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு தொடங்கப்பட்டு காலை 11.25 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் பரிசோதனையில் நடுத்திர தேகம் உடையவராகவும் அவரின் இரண்டாம் பால் நிலை மாற்றங்கள் சீராகவும் காணப்பட்டது. மேற்படி பரிசோதனையில் சம்பந்தப்பட்ட நபர் ஆண்மை தன்மை இல்லாதவர் மற்றும் உடல் உறவு செயல்பாடுகளில் ஈடுபட இயலாது என்று கூறுவதற்கு ஏதும் இல்லை என்று கூறி கருத்துரை வழங்கினேன்.

இதே குற்ற எண் சம்பந்தப்பட்ட திரு.கருப்பையா வ/27 ஆண் என்பவருக்கு மேற்கூறியவாறு விண்ணப்பம் பெறப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோதனை காலை 11.30 மணிக்கு தொடங்கப்பட்டு மதியம் 12.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி பரிசோதனையில் காணப்பட்ட அனைத்தும் எனது மருத்துவ சான்றிதழில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி பரிசோதனையில் சம்பந்தப்பட்ட நபர் ஆண்மை தன்மை இல்லாதவர் மற்றும் உடல் உறவு செயல்பாடுகளில் ஈடுபட இயலாது என்று கூறுவதற்கு ஏதும் இல்லை என்று கூறி கருத்துரை வழங்கினேன்.

சூர்யா என்பவருக்கு நான் வழங்கிய மருத்துவ பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ. 15** ஆக குறியீடு செய்யபடுகிறது.

கருப்பையா என்பவருக்கு நான் வழங்கிய மருத்துவ பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ. 16** ஆக குறியீடு செய்யபடுகிறது.

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.